செ.வெ.எண்.51 நாள்: 27.05.2020

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தோட்டக்கலைத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஸ்ரீவைகுண்டம் மற்றும் கருங்குளம் வட்டார பகுதியில் உள்ள 10 உழவர் உற்பத்தியாளர்கள் குழுக்களுக்கு கூட்டு பண்ணை திட்டத்தின் கீழ் ரூ.50 லட்சம் மானியத்தில் வேளாண் கருவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தோட்டக்கலைத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஸ்ரீவைகுண்டம் மற்றும் கருங்குளம் வட்டார பகுதியில் உள்ள 10 உழவர் உற்பத்தியாளர்கள் குழுக்களுக்கு கூட்டு பண்ணை திட்டத்தின் கீழ் ரூ.50 லட்சம் மானியத்தில் வேளாண் கருவிகளை வழங்கும் நிகழ்ச்சி இன்று (27.05.2020) நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் கலந்துகொண்டு, 5 குழுக்களுக்கு டிராக்டர், ஒரு குழுவுக்கு மினிடிராக்டர் மற்றும் பவர் வீடர், 2 குழுக்களுக்கு பவர் டில்லர், 2 குழுக்களுக்கு திரஸ் கட்டர், பிரேயர், பவர் வீடர், எர்த் அன்கர் உள்ளிட்ட 32 வேளாண் கருவிகளை 10 உழவர் உற்பத்தியாளர்கள் குழுக்களுக்கு ரூ.50 லட்சம் மானியத்தில் வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விசாயிகளின் நலன் கருதி பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். சிறு/குறு விவசாயிகளின் நலன் காக்கும் வகையில் கூட்டுப்பண்ணையத்திட்டம் 2017-18-ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், ஒரு உழவர் உற்பத்தியாளர் குழுவிற்கு வேளாண் இயந்திரங்கள் வாங்குவதற்காக ரூ.5 லட்சம் தொகுப்பு நிதி மானியமாக வழங்கப்படுகிறது. ஏற்கனவே மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்களால் கோவில்பட்டி வட்டார பகுதியில் உள்ள உழவர் உற்பத்தியாளர்கள் குழுக்களுக்கு கூட்டு பண்ணை திட்டத்தின் கீழ் மானியத்தில் வேளாண் கருவிகள் வழங்கப்பட்டது. இன்று ஸ்ரீவைகுண்டம் மற்றும் கருங்குளம் வட்டார பகுதியில் உள்ள 10 உழவர் உற்பத்தியாளர்கள் குழுக்களுக்கு டிராக்டர், மினிடிராக்டர், பவர் டில்லர் உள்ளிட்ட 32 வேளாண் கருவிகள் ரூ.50 லட்சம் மானியத்தில் வழங்கப்பட்டது. விவசாயிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட வேளாண் கருவிகளை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு தங்களது வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் உயர்த்திக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.எம்.பிரித்திவிராஜ், இ.ஆ.ப., தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திருமதி.சரஸ்வதி, உதவி இயக்குநர்கள் திருமதி.ஜனரஞ்சனி, திருமதி.ஜான்சிராணி, திருமதி.சௌந்தர்யா, உழவர் உற்பத்தியாளர் குழு தலைவர்கள் திரு.சுயம்புலிங்கம், (திருப்பணிசெட்டிகுளம்) திரு.ராஜசேகர் (சாயர்புரம்) மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி